**திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர்: திரு.ஆ.இராஜ்குமார் எம்.ஏ.,பி.எட்.,**

**ந.க.எண்:5430/2019/அ3** **நாள்:13.09.2019**

| | | |
|---|---|---|
| பொருள்: | | பொதுப்பணிகள் - திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகு - நேரடி நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-IV பணிகள் 2015-16, 2016-17 மற்றும் 2017-18 - திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்து தட்டச்சர் பட்டியல் வரப்பெற்றது - பணி நியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடல். |
| பார்வை: | 1. | செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை கடித எண்.1639/PSD-A/2019, நாள்.21.02.2019. |
| | 2. | திண்டுக்கல், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.5430/19/அ3,நாள்.28.02.2019. |
| | 3. | ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர், கடித எண்: 547/2019/அ1,நாள்:20.08.2019. |
| | 4. | பழனி, தனி வட்டாட்சியர் ஆதிதிராவிடர் நலம் (அலகு-2), கடித எண்:691/2019/ஆ, நாள்: 22.08.2019. |
| | 5. | உதவி ஆணையர்(கலால்) அவர்களின் கடித எண்: 566/19/ஜே3, நாள்: 06.09.2019. |
| | 6. | தொடர்புடைய ஆவணங்கள். |

**ஆணைகள்:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதி 4 பணிகளில் உள்ளடக்கிய தட்டச்சர் நிலைப்பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டு, 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆண்டின் பட்டியலில் திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்து வரப்பெற்ற பட்டியல்களில் உள்ள 12 தெரிவாளர்களுக்கு பார்வை (2)-ல் காணும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறைகளின்படி திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகில் தட்டச்சர் நிலையில் பணிநியமனம் வழங்கப்பட்டு, 11 தட்டச்சர்கள், தனியர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியிடங்களில் பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்திலிருந்து 2015-2016,2016-2017, மற்றும் 2017-2018 ஆண்டின் பட்டியல்களில் தட்டச்சர் நிலைப்பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒதுக்கீட்டு ஆணைகளில் வரப்பெற்ற வழிகாட்டுதலின் படி, திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகில் பணிபுரிந்து வரும் கீழ்காணும் 3 தட்டச்சர்கள் பணியினை தனியர்கள் பணியேற்பு செய்த நாளின் அடிப்படையில் பின்வரும்

Scanned by CamScanner

நிபந்தனைகளுக்கு உட்பட்டு தட்டச்சர் நிலையில் பணிவரன்முறை செய்தும், பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தகுதிகாண் பருவம் தொடங்குவதாகவும் ஆணையிடப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Service Examination - IV for the year 2015-2016, 2016-2017 and 2017-2018 ".

மேலும், தனியர்கள் தகுதிகாண்பருவ காலத்திற்குள் பின்வரும் தகுதிகளை நிறைவு செய்திட வேண்டும்.

1. தட்டச்சர் நிலையில் தொடர்ச்சியாக மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டு காலப்பணியினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும்.
2. தகுதிகாண்பருவ காலத்திற்குள் தமிழ்நாடு தொழில்நுட்பத் தேர்வான **"Computer on Office Automation கணினிப் பயிற்சி"** யினை முடித்திட வேண்டும்.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்) | பணியேற்பு செய்த நாள் | பணிவரன்முறை செய்ப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | பதிவு எண்: 0507301214<br>பொ.மனோரஞ்சிதம்<br>தட்டச்சர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>ஒட்டன்சத்திரம். | 04.03.2019 முற்பகல் | 04.03.2019 முற்பகல் |
| 2. | பதிவு எண்: 120122203<br>ஆர்.சிவனேஷ்<br>தட்டச்சர்,<br>தனி வட்டாட்சியர் (ஆதிந) அலுவலகம்.<br>பழனி. | 08.03.2019 முற்பகல் | 08.03.2019 முற்பகல் |
| 3. | பதிவு எண்: 261408102<br>ப.கலைவாணி<br>தட்டச்சர்,<br>உதவி ஆணையர் (கலால்) அலுவலகம்,<br>திண்டுக்கல். | 06.03.2019 முற்பகல் | 06.03.2019 முற்பகல் |

17/9/19

மாவட்ட ஆட்சித்தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது),
திண்டுக்கல்.

17.9.19

பெறுநர்:
அட்டவணையில் காணும் 2 தட்டச்சர்கள்.
// உரிய அலுவலர்கள் மூலமாக//

நகல்:
1. உதவி ஆணையர் (கலால்),திண்டுக்கல்.
2. வட்டாட்சியர், ஒட்டன்சத்திரம்.
3. தனி வட்டாட்சியர்,ஆதிதிராவிடர் நலம் (அலகு-2), பழனி.
4. இருப்புக் கோப்பிற்கு.

Scanned by CamScanner